## <u>திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்</u>

ந.க.எண்: 3086/ அ3 / 2020 நாள்: 26–12–2020

பொருள் : தேர்வுகள் – திருப்பத்தூர் கல்வி மாவட்டம் – தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் தேர்வு (NMMS) பிப்ரவரி 2021 – அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் தேர்வு தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. G.O. (Ms) No.647, Revenue and Disaster Management (DM IV) Department Dated.16.11.2020

2. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 027369 / NMMS/2020 நாள். 26/12/20

*******

பார்வை 2ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க 21.02.2021 அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை (NMMS) தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் இணையதளம் வாயிலாக விண்ணப்ப படிவங்களை **28.12.2020 முதல் 08.01.2021** க்குள் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து தலைமை ஆசிரியர்கள் பெற்றக்கொள்ள வேண்டும் மற்றும் இணைப்பில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு செயல்டுமாறும் அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இத்துடன் இணைத்தனுப்பப்படும் அறிவிப்பினையும் அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளி அறிவிப்பு பலகை மூலம் மாணவர்களுக்கும் பெற்றோர்கள் அறியும் வண்ணம் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பார்வையில் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறையை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :** அறிவிப்பு

//ஒம்/–
மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர்

**பெறுநர்:**

அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.